DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - நாகராஜன் | **PW-37** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - |

(எதிரி ஆஜர் )

__முதல் விசாரணை:__-

நான் தற்போது சென்னை கொளத்தூரில் குடியிருக்கிறேன். கடந்த 2002-ம் ஆண்டு முதல் 2006-ம் ஆண்டு வரை கடலூர் மாவட்டம் தொழுதூரில் உள்ள நாவலர் நெடுஞ்செழியன் பொறியியல் கல்லூரியில் கணிணிப் பொறியியல் படித்து வந்தேன். அப்போது என்னுடன் பாலாஜி கேசவன், சம்பத்குமார், பிரபாகரன் ஆகியோர் படித்து வந்தார்கள். வழக்கு சம்பவ காலத்தில் சென்னை புரசைவாக்கத்தில் வசித்து வந்தேன். என்னுடன் பாலாஜி கேசவன் மற்றும் சம்பத் குமார் ஆகியோர் வசித்து வந்தார்கள். பிரபாரன் என்பவர் அவ்வப்போது என்னுடைய அறைக்கு வருவார். மற்றபடி எனக்கு இவ்வழக்கு குறித்து எதுவும் தெரியாது. நான் 2012-ம் வருடம் TNPSC Group II தேர்வு எழுதவில்லை. பின்னிட்டு மேற்படி தேர்வின் வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாக

தெரிந்துகொண்டேன். நான் அதன்பிறகு வேறு ஊருக்கு சென்றுவிட்டேன். வேறு விவரங்கள் தெரியாது. என்னிடம் E-mail ID யாரும் கேட்கவில்லை. தேவ் (எ) தேவானந்தை எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கு பிறகு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது 12.08.2012-ம் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு மேற்படி பிரவீன், தேவா (எ) தேவானந்தன், டாக்டர் சுரேஷ், ரமேஷ் மற்றும் நான் ஆகியோர் சாப்பிட்டு கொண்டு இருந்தபோது என்னையும் சம்பத் குமார் என்பவரையும் விட்டுவிட்டு மற்றவர்கள் மேற்படி தேர்வின் வினாத்தாளை முன்கூட்டியே கசியச் செய்வது குறித்து பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும் அதை நாங்கள் காதில் வாங்காதது போல் வந்துவிட்டதாகவும் தேர்வு முடிந்த அன்று எங்களை சந்தித்து போலீசாரிடம் காட்டிக் கொடுக்க வேண்டாம் என்று எதிரி தேவா (எ) தேவானந்த் கேட்டுக்கொண்டதாகவும் பின்னிட்டு போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் ஒரு நாள் காலை 10.00 மணிக்கு விழுப்புரம் பேருந்து நிலையத்தில் மேற்படி தேவா (எ) தேவானந்தை நானும் சம்பத் குமாரும் அடையாளம் காட்ட போலீசார் கைது செய்ததாகவும் அப்போது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - பாலாஜி கேசவன் | **PW-38** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - |

(எதிரி ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>-

நான் திண்டுக்கல்லில் குடியிருக்கிறேன். மருத்துவனையில் பணி செய்கிறேன். அ.சா.37-யை தெரியும். 2002-2006-ம் வருடம் கடலூர் மாவட்டம் நாவலர் நெடுஞ்செழியன் பொறியியல் கல்லூரியில் EEE படிப்பு படித்தேன். என்னுடன் அதே கல்லூரியில் நாகராஜன், சம்பத், பிரபாகரன் ஆகியோர் படித்தார்கள். நாங்கள் அனைவரும் வேறு வேறு பிரிவுகளில் படித்தோம். 2011-2012-ம் வருடம் புரசைவாக்கத்தில் மேற்படி நாகராஜ் மற்றும் சம்பத் ஆகியோருடன் தங்கியிருந்தேன். மருத்துவர் சுரேஷ் குமார் என்பவரை தெரியாது. 2012-ம் வருடம் CBCID போலீசார் நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்து எனக்கு சுரேஷ்குமாரை தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியாது என்று சொன்னேன். மேற்படி சுரேஷ்குமாருக்கும் சம்பத்துக்கும் நட்பு இருப்பதாகவும் சம்பத்

குமாரின் போன் நம்பர் வேண்டும் என்றும் கேட்டார்கள். நான் கொடுத்தேன். நான் 2012-ம் வருடம் TNPSC GROUP II தேர்வு எழுதினேன். தேர்வுக்கு மறுநாள் மேற்படி தேர்வின் வினாத்தாள் முன்கூட்டியே கசிந்ததாக கேள்விப்பட்டேன். மேற்படி தேர்வு பின்னிட்டு ரத்தாகிவிட்டது. தற்போது எனக்கு மேற்படி சம்பத் குமாரின் தொலைபேசி எண் நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தாகள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

CBCID போலீசாரின் விசாரணையின்போது சம்பத்குமாருக்கும் சுரேஷ்குமாருக்கும் நட்பு இருந்தது என்று போலீசார் என்னிடம் சொன்னதாக நான் சொல்வில்லை என்றால் சரியல்ல. சம்பத்குமாரின் தொலைபேசி எண்ணை நான் போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் குறிப்பிட்ட விவரங்கள் பொய்யானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - வினோத் | **PW-39** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - |

(எதிரி ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>-

நான் முசிறியில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். நான் MA.,M.Ed படித்துள்ளேன். செல்வராஜ் மகன் பிரபாகரன் என்பவரை தெரியும் அவர் என் பக்கத்து வீட்டில் குடியிருந்தார். நான் படிப்பை முடித்து விட்டு 2012-ம் வருடம் TNPSC GROUP II தேர்விற்காக தயாராகிக் கொண்டிருந்தேன். அப்போது பிரபாகரன் என்னிடம் தனக்கு மேற்படி தேர்வின் வினாத்தாள் முன்கூட்டியே கிடைத்தால் எனக்கு தருவதாகவும் அதன் மூலம் நான் படித்து வேலைக்கு செல்ல வேண்டும் என்று சொன்னார். தேர்விற்கு முந்தைய நாள் முசிறியில் என்னுடைய வீட்டில் என்னை இருக்குமாறு சொன்னார். அன்றைய இரவு நான் பிரபாகரனை தொடர்பு கொண்டு வினாத்தாள் வந்துவிட்டதா என்று கேட்டேன். இன்னும் வரவில்லை என்றும் காத்திருக்கும்படியும் சொன்னார். மறுநாள் நான்

எப்போதும் போல தேர்வு எழுத சென்றுவிட்டேன். பின்னிட்டு மறுநாள் மேற்படி தேர்வின் வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாகவும் தேர்வு ரத்து செய்யப்பட்தாகவும் அதுதொடர்பாக பிரபாகரன் மற்றும் நண்பர்களை கைது செய்துவிட்டதாக தெரிந்துகொண்டேன். இது தொடர்பாக CBCID போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிரபாகரனை எனக்கு தெரியும் என்றும் அவர் TNPSC Group II வினாத்தாளை முன்கூட்டியே தருவதாக சொன்னதாக சொல்வதும் தேர்விற்கு முன்பு அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் கேட்டதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் போலீசார் நிர்பந்தத்தின் பேரில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> : இல்லை.